1980 ஜூலை 22]

மேற்கண்ட விபரங்கள் கிடைத்த பின்பு வாரியத்தின் ஒப்புத லுடன் அரசின் ஒப்புதலும் பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருமங்கலம் நகரம் காசி—கன்னியாகுமரி நெடுஞ்சாலை யிலே இருக்கின்ற வளர்ந்து வருகின்ற ஒரு நகரமுமாகும். அங்கே குடிநீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. அங்கே கிடைக்கின்ற தண்ணீரில் கால்சியம் கன்டென்ட் அதிகமாக இருக்கின்றது. ஆகவே நிதிநிலைமை சரியாக இல்லாத நிலை மை இருந்தாலும் கூட அதன் காரணத்தால் காலதாமதம் செய் யாமல் விரைந்து செயல் படுத்தி அம்மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் அரசு முனைப்பாக செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, நகராட்சி ஆய்வாளர் அவர்களிடம் இத்திட்டத்தை செயல்படுத்த திருமங்கலம் நகராட்சியின் நிதி நிலைமை பற்றிய விபரம் கோரப்பட்டுள்ளது. அந்த விபரத்தைப் பெற்று மற்ற பிரச்சினையும் பரிசீலனை செய்த பிறகுதான் இத் திட்டத் தைச் செயல்படுத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கருத்து எந்த அளவுக்கு சாத்தியக்கூறு என்பதையும் பரி சீலனை செய்ய வேண்டும்.

திரு. என்.எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்தத் திருமங்கலம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 1964லிருந்து பரிசீலனையில் இருந்து காலதாமதம் ஆகிக் கொண்டு வருகின்றது. எனவே, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மற்ற குறைபாடுகள் இருந்தாலும் கூட விரைவாக இந்த ஆண்டே இத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, திருமங்கலம் நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் இருந்து வரக்கூடிய பதிலைப் பொறுத்துத்தான் அரசினுடைய முடிவு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்பியாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம்.

*வினா எண் 35— திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள நம்பியாற்றின் குறுக்கே மூவாற்றங்கரை என்னுமிடத்தில் அணைகட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

1980 ஜூலை 22]

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. இ. முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, 1964-ல் இருந்து ஒவ்வொரு முறையும் இத் திட்டம் ஆய்வில் இருக்கின்றது என்ற பதில்தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே நடப்பாண்டிலேயாவது இத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 78.5 லட்சத்தில் பூர்வாங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. அதன்படி எவ்வளவு ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கும் என்றெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு திரும்பவும் வேறு ஏதாவது அதிகமான இடங்களுக்கு நீர் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பது குறித்தும் மறு ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அந்த ஆய்வு விரைவிலே முடிந்துவிடும். அதன் பிறகு அரசு இத்திட்டத்தை மேற்கொள்ளலாமா என்பது பற்றி முடிவு செய்யும்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இத்திட்டத்தினால் சுமார் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, திட்டமே இன்னும் ஆய்வில்தான் இருக்கின்றது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்த பூர்வாங்க திட்ட அறிக்கையின் படி 300 ஏக்கர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். ஏற்கெனவே பாசன வசதி பெற்று வருகின்ற 390 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யப்படும். மற்றும் 660 ஏக்கர் நிலத்திற்கு ஒரு போகத்திற்கு நீர் விடுவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றது.

தஞ்சை மாவட்டத்திற்கு மின்சக்தி வழங்கல்.

* கு. கா. வி. எண் 32—திரு எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: